# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 11/2021 | **CNR No.** | : | TNKI13-000009-2021 |
| **Name** | : | குமரேசன் | **Father's Name** | : | செங்கோடன் |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 26 | **Village** | : | காரப்பட்டு |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 11:35 AM | **End Time** | : | 12:10 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 05.03.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

(1) **சர்வே எண்.69/2பி** ஜே புதூர் கிராமமே என்றால் அது எங்களுக்கு பாத்தியப்பட்ட பொது நிலமாகும். **சர்வே எண்.69/2பி** யார் யாருக்கு பாத்தியம் என்றால் எனது அப்பாவிற்கும் எனது பெரியப்பாவிற்கும் பாத்தியப்பட்டதாகும். அதை எனது அப்பாவும் , பெரியப்பாவும் முனியப்பன் மனைவி ராஜம்மாள் என்பவருக்கும் மாரியப்பன் மனைவி உஷா என்பவருக்கும் மற்றும் சுமார் 20 நபர்களுக்கு கிரையம் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது, எனது அப்பாவிற்கு தான் தெரியும். எனது அப்பா கிரையம் கொடுத்துள்ள நிலங்களில் தான் மேற்படி நபர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றும் அது தான் ஜே புதூர் கிராமம் என்றால் நிறைய நபர்களுக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியும். எனது அப்பா மற்றும் பெரியப்பா கிரையம் கொடுத்துள்ளது போல் மற்ற சில நபர்களும் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு

தெரியாது. மேற்சொன்னது போல் கிரையம் வாங்கி நபரும் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான், சிலர் குடியிருந்து வருகிறார்கள். மேற்படி குடியிருந்து வரும் நபர்கள் **சர்வே எண்.135, 136 மற்றும் 132** ஆகியவை வழியாக தான் வண்ணாம்பள்ளி ஏரிக்கு சென்று வருகிறார்கள் என்றால் அதுவும் ஒரு வழியாகும்.

(2) திருப்பத்தூர் – ஊத்தங்கரை சாலையில் இருந்து **சர்வே எண்.76/1 டி, 50/3 பி, 50/4 ஏ, 51/2 ஏ 4, 51/2 சி2, 52/1 ஏ, 55/1 சி, 70/3, 69/2 ஏ** ஆகிய வண்டி வழி தார் சாலை வழியாக ஜே புதூர் கிராமம் வந்து அதன் பின்னர் **சர்வே எண்.135, 136, 132** வழியாக வண்ணாம்பள்ளி ஏரிக்கு சென்றைய முடியும் என்றால் சின்னசாமி நகர் வழியாகவும் ஓனி வழியாகவும் தார் சாலைக்கு செல்லாம். நான் சொல்வது போல் சின்னசாமி நகர் வழியாகவும் ஓனி வழியாகவும் ஜே புதூர் கிராமத்திற்கு வழி எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

(3) நான் சொல்லும் சின்னாசமி நகர் உள்ள பாதையானது தனிப்பட்ட நபர்களுக்கான பாதை என்றும் அதில் பொதுமக்கள் யாரும் செல்ல கூடாது என்று தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி ஊத்தங்கரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் **அசல் வழக்கு எண்.56/2019** நிலுவையில் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. கோவிந்தராஜ், திருமால், ரேவதி, ரவீந்திரன், விக்னேஷ் ஆகியோர்கள் தெரியுமா என்றால் தெரியும், அவர்கள் நிலத்தில் இருந்து எனது நிலம் எவ்வளவு தூரம் என்றால் சரியாக தெரியாது. மேற்சொன்ன நபர்கள் மேற்படி சின்னசாமி நகரில் உள்ள பாதையானது தனிப்பட்ட பாதை என்றும் அதில் ஊர் பொதுமக்கள் யாரும் செல்ல கூடாது என்றும், தார் சாலை அமைக்க கூடாது என்றும்

ஊத்தங்கரை வட்டார வளர்ச்சி அலுவலர், ஊத்தங்கரை தாசில்தார், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் பலர் ஆக மொத்தம் 24 நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது, ஆனால் நாங்கள் சென்று வந்து கொண்டு தான் இருக்கிறோம். நான் சொல்வது போல் சின்னசாமி நகர் வழியாக நான் சென்று வருவதில்லை என்றால் சரியல்ல.

(4) ஜே புதூர் கிராமத்தில் சுமார் 500 குடும்பங்கள் இருக்கும் என்றால் சரியல்ல, 15–20 குடும்பங்கள் தான் இருக்கும். நான் சொல்வது தவறு என்றும் சுமார் 500 குடும்பங்கள் இருக்கின்றன என்றும் அவர்களுக்கு குடும்ப அட்டைகள் உள்ளன என்றால் சரியல்ல. ஜே புதூர் கிராமத்தில் எத்தனை குடும்பங்கள் உள்ளன என்றும் ஜே புதூர் கிராமத்திற்கு சென்றடைய ஒரே வழி தான் உள்ளது என்று காட்டுவதற்கு நீதிமன்ற ஆணையர் நியமிக்க ஆட்சேபணை உள்ளதா என்றால் மற்ற வழிகளையும் சேர்த்து பார்வையிட எனக்கு ஆட்சேபணை இல்லை. நீதிமன்ற ஆணையர் நியமித்தால் ஒரு வழி தான் உள்ளது என்ற உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால் தான் நான் ஆட்சேபணை செய்கிறேன் என்றால் சரியல்ல.

(5) **பி.வா.சா.ஆ.1** ஆவணம் எனது அப்பா **1 ஏக்கர் 50 சென்ட்** கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாதையானது திருப்பத்தூர் – ஊத்தங்கரை ரோட்டில் இருந்து செல்லப்ப கவுண்டர் நிலங்கள் வழியகாக திருப்பத்தூர் – ஊத்தங்கரை சாலையில் இருந்து **சர்வே எண்.76, 50, 51, 52, 70, 54, 55** ஆகிய நிலங்கள் வழியாக பாதை உள்ளது என்றும் அதை

தடை செய்ய கூடாது என்றும் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையில் தான் தார் சாலை அமைத்து ஜே புதூர் கிராம மக்கள் சென்று வருகிறார்கள் என்றால் சரிதான், அதிலும் செல்வார்கள் மற்ற வழிகளும் உண்டு. நான் சொல்வது போல் வேறு எந்த வழிகளும் இல்லை என்றும் மேற்சொன்ன வழி மட்டும் தான் உள்ளது என்றால் சரியல்ல.

(6) எனது முதல்விசாரணை பிரமாணபத்திரத்தில் பத்தி 5 ல் ஜேசிபி வைத்து பள்ளம் தோன்றியதாக சொல்லும் நிலையில் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ஜேசிபி வாகனத்தின் பதிவு எண்ணோ அல்லது அதன் உரிமையாளர் பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் கொடுத்ததாக சொல்லும் புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அதனால் தான் அதன் விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(7) நெருஞ்சாலையில் இருந்து ஜே புதூர் கிராமத்திற்கு செல்லும் மேற்படி பாதையானது நீண்டகாலமாக சென்று வரும் பூஸ்திதி பாதை என்றும் அதன் பயன்பாட்டை மறைத்து முன் ஆவணங்கள் எதுவும் இல்லாமல் ஆவண பதிவு செய்து பொய்யாக உரிமை கொண்டாடி வருகிறேன் என்றால் சரியல்ல. அரசு அளவீடு செய்து சரியான அளவில் தான் தார் சாலை அமைத்தார்கள் என்றும் நான் சரியாக அளவீடு செய்யாமல் தார் சாலை அமைத்துள்ளதாக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஊர் பொதுமக்களும் இவ்வழக்கின் அவசிய தரப்பினர்கள் என்றும் அவர்களை சேர்க்காமல்

இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 1 முதல் 8 பிரதிவாதிகள் 10ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய நன்கொடை ஆவணம் சட்டபடி செல்லதக்கது என்றும் அதனை செல்லாது என விளம்புகை கோர நான் உரிமை படைத்தவர் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்குமூலம் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(8) **குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai